**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE, ERANIEL**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNNS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 172/2024 P.W. 8/L.W. 8**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. கலைமதி | **Calling** | : | |
| **Father's Name** | : | த/பெ. தங்கசொர்ணம் | **Age** | : | |
| **Village** | : | | | | |
| **Taluk** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 20.11.2024.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள்ஆஜர்படுத்தப்பட்டார்கள். குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

**1.** நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வழக்கறிஞராக பணிச் செய்து வருகிறேன். குற்றம் சுமத்தப்பட்ட நபர்களை எனக்குத் தெரியாது. அ.சா1 ஐ எனக்குத் தெரியாது. 22.04.2024 ம் தேதி மதியம் 12.00 மணியளவில் நானும் எனது நண்பர் பிரேம் ராஜா என்பவரும் வேலை முடித்துவிட்டு நீதிமன்ற வளாகத்தில் நின்றுக்கொண்டிருந்தபோது சத்தம் கேட்டது. போலீசார் நின்றுக்கொண்டிருந்தார்கள். என்ன சம்பவம் நடந்தது என்று எங்களுக்குத் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி அரசுத்தரப்பு சங்கதிகளிலிருந்து முற்றிலும் மாறுப்பட்ட சங்கதியை இந்நீதிமன்றத்தில் சாட்சியமளித்திருப்பதால் மேற்படி தனது தரப்பு சாட்சியை நீதியின் நலன் கருதி குறுக்குவிசாரணை செய்ய கேட்கிறார். இந்நீதிமன்றம் வழக்கின் தன்மை கருதி இந்திய சாட்சிய சட்டம் 1872 பிரிவு 154-ன் கீழ் அனுமதிக்கிறது.**

**அரசுத்தரப்பு குறுக்கு விசாரணை**

கடந்த 22.04.2024 ம் தேதி மதியம் 12.00 மணிக்கு நானும் பிரேம்ராஜா என்பவரும் இரணியல் நீதிமன்ற அலுவல் முடித்து நீதிமன்றத்தின் உள்நடுதளத்தில் நின்றுக்கொண்டிருந்த போது ஆயுதப்படை போலீசார் கைதிகளை நீதிமன்றத்தில் ஆஜர்செய்வதற்காக அழைத்து வந்தார்கள்

என்றும் அப்போது குற்றம் சுமத்தப்ப்ட்ட நபர்களான சிவா, ஐயப்பன், விஜய் ஆகியவர்களை பார்ப்பதற்கு அவர்களது நண்பர்கள் வந்திருந்தார்கள் என்றும், அதன் பிறகு மதியம் 12.15 மணி அளவில் குற்றம் சுமத்தப்பட்ட நபர்களை நீதிமன்ற காவலர் அறைக்கு போலீசார் அழைத்துச் செல்லும் வழியில் அ.சா1 மற்றும் அவருடன் இருந்த காவலர்களையும் குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தகாத வார்த்தையால் பேசினார்கள் என்றும், யூனிபார்ம் போட்டிருக்கிறீர்கள் என்று பார்க்கமாட்டோம், மண்டையை உடைத்துவிடுவோம் என்று கூறினார்கள் என்றும், எங்களை ஏதாவது செய்தால் எங்கள் கழுத்தை நாங்களே அறுத்துக்கொள்வோம் என்று மிரட்டினார்கள் என்றும் இதனால் மற்ற கைதிகளை போலீசார் உரிய நேரத்தில் நீதிமன்றத்தில் ஆஜர் செய்ய இயலவில்லை என்றும்,போலீசாரை அரசு பணி செய்யவிடாமல் தடுத்தார்கள் என்றும், இரணியல் காவல்நிலையத்தில் இது சம்மந்தமாக புகார் கொடுத்தார்கள் என்றும், இந்த சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன் என்றும் இது குறித்து போலீசார் விசாரணையிலும் வாக்குமூலத்திலும் கூறிவிட்டு தற்சமயம் வழக்கின் உண்மை நிலையை மறைத்து எனக்கே தெரிந்த காரணத்திற்காக உண்மை சங்கதியை மாற்றி சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை** :

இல்லை .

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.